1972 மார்ச் 1]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்பொழுது இருக்கும் கட்டடத்தையே பழுதுபார்த்து சீர் செய்தால், அதுவே நீண்ட நாட்களுக்கு உபயோகப்படுத்த முடியும் என்று அரசாங்கத்திற்குத் தெரிகிறது.

கிரியாறுத் திட்டம்

* 270 **வினா—திரு. எம். முத்தையா:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'கிரியாறுத் திட்டம்' இப்பொழுது அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

தமிழ் நாட்டில் புதிய வேளாண்மைக் கல்லூரிகள்

* 271 **வினா—திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மேலும் புதிய வேளாண்மைக் கல்லூரிகள் திறக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு உதவித் தொகை

* 272 **வினா—திரு. க. சுப்பு:** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகள், பயிற்சிப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு அவர்களுடைய இன்றியமையாத கல்வித் தேவையை அடிப்படையாகக் கொண்டு உதவித் தொகைகள் வழங்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவை முன் ஒரு அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்பொழுது பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு ரூ. 2,000-க்கு வருமானம் உட்பட்டிருந்தாலே உபகாரச்சம்பளம் கொடுக்கப்படுகிறது. அந்த வரம்பை ரூ. 3,600 என்று உயர்த்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அப்படிப்பட்ட எண்ணம் அரசின் கருத்தில் இருக்கிறது. அதில் முடிவு எடுக்கவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, பாக்வர்ட் கிளாஸ் டிபார்ட்மெண்டால் நடத்தப்படும் ஆஸ்டல்களில் இருக்கும் மாணவர்களுக்கு ரூ. 25 கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் பிரைவேட் ஆஸ்டலில் இருப்பவர்களுக்கு ஹரிஜன இலாகா மூலமாக ரூ. 20 தான் கொடுக்கப்படுகிறது. இந்த வித்தியாசம் எதற்காக என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அரசு நடத்துகிற விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு ரூ. 25-ம், தனியார் நடத்துவதில் ரூ. 20 என்றும் கொடுக்கப்படுகிறது. உணவு விடுதிகளில் தங்கி கல்லூரிகளில் படிப்பவர்களுக்கு ரூ. 45-ம், நகரங்களில், பிற இடங்களில் ரூ. 36-ம் கொடுக்கப்படுகிறது. அதேபோல், தொழில் கல்வி படிப்பவர்களுக்கு நகரங்களில் ரூ. 45-ம், பிற இடங்களில் ரூ. 35-ம் கொடுக்கப்படுகிறது. பிற வகைகளில் ரூ. 25, ரூ. 25 என்ற அளவில் கொடுக்கப்படுகிறது. மாணவிகளுக்கும், மலைப் பிரதேசங்களிலும் ஒரு ரூபாய் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. வேறு வித்தியாசம் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது கொடுக்கப்பட்டு வரும் உதவித் தொகை, தொழில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட எண்ணிக்கை வரையில்தான் கொடுக்கப்படுகிறது. வேறு கல்லூரிகளில் படித்தால் அவர்களுக்கே கிடைக்கும். ஆகவே, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இந்த ஸ்காலர்ஷிப்பை எல்லோருக்கும் கொடுக்க அரசு முன்வருமா ?

@ 60-62-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1972 மார்ச் 1]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தொழில் கல்வி பயிலும் மாணவர்கள் அத்தனைபேர்களுக்கும் விடுதியில் சேர்ந்து படித்தால் கிடைக்கும்.

திரு. எம். ஏ. லத்திப் : தலைவர் அவர்களே, இப்பொழுது பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் பழைய முறையில் இருக்கிறதா அல்லது அண்மையில் ஏதாவது மாறுதல் அரசாங்கம் செய்திருக்கிறதா? உருது பேசும் லப்பைகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் சலுகைகள் கொடுக்கப்படவில்லை. தாசில்தார்களும் மற்றவர்களும் தடுக்கும் நிலைமைகள் இருக்கின்றன. அதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது ஜி.ஓ. அனுப்பியிருக்கிறார்களா? அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இப்பொழுது முன்பு இருந்ததை மாற்றிக் கொடுக்கப் பட்டிருக்கிறது. பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் நகரத்தில் ரூ. 75 கொடுக்கப்படுகிறது. முன்பு இது ரூ. 40 ஆக இருந்தது. முன்பு பிற இடங்களில் ரூ. 36 என்று இருந்தது, இப்பொழுது ரூ. 70 என்று கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்ட மாறுதல்கள் இந்த ஆண்டிலிருந்து வந்திருக்கின்றன. கலைக் கல்லூரி, சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு பழைய முறை ரூ. 40 என்பதை இப்பொழுது ரூ. 60 ஆகவும் நகரங்களில் கொடுக்கப்படுகிறது. பிற இடங்களில் அதுவே ரூ. 50 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதே போல், தொழில் கல்விக்குப் பழைய முறை ரூ. 40. இப்பொழுது ரூ. 50. உருது பேசும் லப்பைகள் பற்றி அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு எந்தத் தகவலும் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், சமீபத்தில் ஓசூர் பகுதியில் இருக்கும் ஐ.டி.ஐ. பள்ளியில் எல்லோருக்கும் இந்த உதவித் தொகை கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். வேறு பள்ளிகளில் கொடுக்கப்படுகிறது. ஆனால், இந்தப் பள்ளியில் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அதை ஒழுங்குபடுத்த அரசு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறைபாடுகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் ஆவன செய்யப்படும்.

[1972 மார்ச் 1

திரு. அ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு விடுதிகளில் இடம் கிடைக்காததால், வெளியிலே தங்கிப் படிக்க வேண்டியதாக இருக்கிறது. அது மாணவர்களுடைய தவறு இல்லை. ஆகவே, அப்படி வெளியிலே இருக்க வேண்டிய அவசியத்தில் உள்ள மாணவர்களுக்கும் இந்த உதவித் தொகையைக் கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அப்படிப்பட்ட நிலையில் உதவி கொடுக்க திட்டம் இப்பொழுது ஒன்றும் இல்லை.

பல்லடம் வட்டத்தில் மின்சார நிறைவு விழா

*273 வினா—திரு. என். குமாரசாமி: மாண்புமிகு மின் சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை ஜில்லாவில், பல்லடம் தாலுக்காவில் மின்சார நிறைவு விழா ஏதேனும் அரசாங்கத்தால் கொண்டாடப்பட்டதா?

(இ) ஆம் என்றால், இன்னும் பல கிராமங்களில் அரிஜன சேரிகளுக்கு விளக்குகள் இல்லாமல் இருப்பது உண்மையா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) பல்லடம் வட்டத்தில் 27—9—1971 வரையில் மாவட்ட அரிசன நல அதிகாரி மற்றும் பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகள் கொடுத்த பட்டியல்களின்படி எல்லா அரிசன குடியிருப்புகளுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, இன்னும் பல கிராமங்களில் விளக்குகள் கொடுக்காமலேயே, காரியம் பூராவும் நிறைவு பெறாமலேயே, பூர்த்தி செய்துவிட்டதாக அதிகாரிகள் நினைத்துக்கொண்டு நிறைவு விழாக்கள் கொண்டாடுகிறார்கள். ஆனால், ஜனங்கள் பூர்த்தி செய்யவில்லை என்று சொல்லி, அரிஜனங்கள் அல்லல்படுகிறார்கள். இதற்கு அரசாங்கம் இனியாவது அப்படிப்பட்ட நிலைகள் இல்லாமல் அந்தக் கிராமங்களுக்கும் மின் வசதி கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: எதையாவது குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். உறுப்பினர் சில கிராமங்களைப் பற்றிக் கேட்டார்கள். வாரியத்தால் செய்ய வேண்டிய வேலைகள் முடிவு